**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.251/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **ரெங்கராஜ் (கிராம நிர்வாக அலுவலர் ஓய்வு)** |
| Father's / Husband Name | : | **முத்துகவுண்டர்** |
| Address | : | **துறைமங்களம்** |
| Age | : | 70/2025 |

**தேதி : 17.02.2025**

**சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2012ம் ஆண்டு பெரம்பலூர் வடக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது எளம்பலூர் கிராம நிர்வாக அலுவலக பொறுப்பை கூடுதலாக செய்துவந்தேன். 2012ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை, ஒருநாள் பெரம்பலூர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு ஆய்வாளர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து சர்வே எண்.384/6எ யாருக்கு சொந்தமானது என்று கேட்டார். நடேசன் மகன் முத்துசாமி மற்றும் முத்துசாமியின் மனைவி வசந்தா ஆகியோர்கள் பெயரில் இருப்பதாக சொன்னேன். அந்த இடமானது 17 நபர்களின் பெயரில் பட்டா இருந்ததாக சொன்னேன். கூடுதலாக சர்வே எண். 384/3எ யாருக்கு சொந்தமானது என்று கேட்டார். அந்த இடம் செல்லமுத்து மனைவி தைலம்மை பெயரில் உள்ளதாக சொன்னேன். அதற்கான ஆவணங்களை என்னிடமிருந்து வாங்கி சென்றார். சர்வே எண். 384/6எ தைலம்மைக்கு சொந்தமில்லை என்று சொன்னேன். ஆய்வாளர் சில ஆவணங்களை என்னிடம் காண்பித்து எனக்கு அதைபற்றி தெரியுமா என்று கேட்டார்கள். அதைபற்றி எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1முதல் 4 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீஸார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளை தவிர வேறு சங்கதிகள் என்னுடைய வாக்குமூலத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. சர்வே எண். 384/6ல் தைலம்மைக்கு சொந்தமில்லை என்று என்னுடைய அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை பார்த்துதான் சொன்னேன் என்றால் சரிதான். சர்வே எண். 384/6ல் தைலம்மைக்கு சொந்தமில்லை என்பதற்கு ஆவணங்களை போலீஸிடம் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. சர்வே எண். 384/6எ–ல் 1 ஏக்கர் 40 செண்ட் வசந்தா பெயரில் உள்ளது. தைலம்மைக்கும், சர்வே எண் 384/6ல் 1 ஏக்கர் 40 செண்ட் இருக்கிறது என்றால் எங்களுடைய ஆவணத்தில் இல்லை. எங்களுடைய ஆவணத்தில் தைலம்மை பெயரில் நிலம் உள்ளது என்றாலும், அதை மறைத்து நான் போலீஸிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் .384/6ன் மொத்த விஸ்தீர்னம் எவ்வளவு என்று சொல்லவில்லை. நான் ஆவணங்களை பார்வையிட்டிருந்தால் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீர்ணம் என்று சொல்லியிருப்பேன் என்றாலும், ஆவணங்களை பார்வையிடாமல் போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரிக்கவிலலை என்றாலும், அதனால்தான் நான் அவர்களிடம் அதற்கான ஆவணங்களை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மேற்கண்ட குறுக்கு விசாரணையை 5வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்டுவதாக 5வது எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார்.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.